

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், பரணிபுத்தூர் ஊராட்சியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் நடைபெற்ற புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் விழாவில் 800 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா, ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் உள்ளனர்.



தேசிய சிலம்பம் சாம்பியன்ஷிப் 2024–2025 ஆண்டுக்கான போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற ஆவடி பகுதியைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் தமிழ்நாடு சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பயிற்சியாளர்கள் நித்தியானந்தம், சந்தோஷ் குமார், ஆவடி மாநகர 43 வது வார்டு வட்டக் கழக செயலாளர் இளங்கோ மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையில் துணை முதல்வர் முன்னிலையில் திருமணம் நடைபெறுகிறது!

# கும்மிடிப்பூண்டி கி.வேணு மகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி இல்ல திருமண விழா!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்பில்

திருவள்ளூர் 23;

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கும்முடிபூண்டி கி.வேணு - பத்மாவதி வேணு ஆகியோர் மகளும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளரும் மாவட்ட ஊராட்சி குழு தலைவருமான கே.வி.ஜி. உமா மகேஸ்வரியின் மகன் கோ. ஸ்டாலினுக்கும், குன்றத்தூர் வட்டம் கொழுமணிவாக்கம் பகுதியை சேர்ந்த ஞானபிரகாசம், பூங்கோதை ஆகியோரின் மகள் ஞா.யுவஸ்ரீ திருமணத்தை கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கழகத் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் இன்று (23.10.2024) காலை 9.00 மணியளவில் சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது



இதில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நிலத்தை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, முன்னாள் மாவட்ட செயலாளர் இ.ஏ.பி, சிவாஜி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, வி.ஜி.ராஜேந்திரன், க.கணபதி, ஜோசப் சாமுவேல், துரை சந்திரசேகரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

இந்திருமண நிகழ்ச்சியில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி கழகத் துணை பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் பொன்முடி, இராசா எம்.பி, கனிமொழி கருணாநிதி எம்.பி, அந்தியூர் ப.செல்வராஜ், கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, அமைச்சர் ஏ.வ.வேலு, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தயாநிதிமாறன் எம்.பி, மு.க.தமிழரசு,

மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமைக் கழகச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவள்ளூர் கிழக்கு மத்திய மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட ஊராட்சி மன்ற திட்டக்குழு தலைவர்கள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் பின்னர் இன்று மாலை 6.00 மணியளவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அண்ணா அறிவாலத்தில் நடைபெறுகிறது.

கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே ஆனந்த் குமார் நன்றி கூறுகிறார்.

### சென்னையில் இருந்து திருப்பதி வரை செல்லும் புதிய பேருந்தை திருவள்ளூரில்

# வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், அக். 23:

சென்னையில் இருந்து திருப்பதிக்கு 201 என்ற அரசு விரைவு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்த வழித்தட பேருந்தை திருப்பதி செல்லும் பக்தர்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் சென்னையில் இருந்து திருவள்ளூர், திருத்தணி, நகரி, புத்தூர், ரேணிகுண்டா வழியாக திருப்பதி வரை புதிய பேருந்து தடம் எண் 201 வழிதடத்தை நேற்று திருவள்ளூர் பேருந்து நிலையத்திலிருந்து திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருவள்ளூர் பணிமனை கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த பேருந்து சென்னையிலிருந்து திருப்பதி வரை இயக்கப்பட உள்ளது. முதல் கட்டமாக இன்று திருவள்ளூரில் இருந்து தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் அரசு போக்குவரத்து பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன், திருவள்ளூர் பணிமனை கிளை மேலாளர் எழில், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், திருவாலங்காடு மேற்கு ஒன்றிய திமுக செயலாளர்கள் கூளூர் எம். ராஜேந்திரன் எஸ். மகாலிங்கம், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், மாவட்ட அமைப்பாளர்கள் வி.எஸ். நேதாஜி, என்.வேலாயுதம் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தா. மோதிலால், டி.கே.பாபு, நகர நிர்வாகிகள் தி.ஆ.கமல கண்ணன், எம்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவக்குமார் கொப்பூர் டி.திலீப்குமார், காஞ்சிப்பாடி பி.சரவணன், அ.பவளவண்ணன், நந்தகுமார், எழில், உலா நாதன், வீனஸ்,

கிளை செயலாளர் பஸ் ஸ்டாண்ட் ஜெ.சேகர், நகர மன்ற உறுப்பினர்கள் டி. அயூப்அலி, எஸ்.தனலட்சுமி, மற்றும் மாலதி வாசன், எம்.சேகர், இரா.தினகரன், இ.தர்மலிங்கம், டி.அரிஷ் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

# மழைநீர் வடிகால் பணிகள்! மேயர் ஆர்.பிரியா ஆய்வு!

சென்னை, அக்.23

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (22.10.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, நடவடிக்கையாக கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 128க்குட்பட்ட சாதிக் பாஷா நகர் மற்றும் சஞ்சய் காந்தி காலனி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் வடிகால்களை இடித்துவிட்டு, புதிய மழைநீர் வடிகால்கள் அமைப்பது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வார்டு 129க்குட்பட்ட பெரியார் தெருவில் ரூ.14 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குழாய் வடிவிலான மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மஜ்ஜீத் நகரில் தற்போது பெய்த கனமழையில் அதிகளவு நீர் தேங்கியதைத் தொடர்ந்து, அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மழைநீரை உடனடியாக வெளியேற்றும் வகையில் கூடுதலாக மோட்டார் பம்புகளை தயார் நிலையில் வைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மேயர் அவர்கள் விருகம்பாக்கம் கால்வாயில் மழைநீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் 4 ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் மழையின் காரணமாக தேங்கிய ஆகாயத் தாமரைகள் மற்றும் வண்டல்களை அகற்றும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு கொட்டப்பட்டிருந்த கட்டிடக் கழிவுகளை உடனடியாக அகற்றிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு127க்குட்பட்ட சீனிவாசன் நகரில் ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் வடிகால்களை இடித்துவிட்டு, புதிய மழைநீர் வடிகால்கள் அமைப்பது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ஜெய் நகரில் தற்போது பெய்த கனமழையில் அதிகளவு நீர் தேங்கியதைத் தொடர்ந்து, அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மழைநீரை உடனடியாக வெளியேற்றும் வகையில் கூடுதலாக மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் பொ.லோகு, திருமதி ஆர்.ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா, மு.ரவிசங்கர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு - 20 சதவீதம் தீபாவளி போனஸ்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2023-2024 ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex gratia) 2024—2025-இல் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

போனஸ் சட்டத்தின் கீழ் வரும் தலைமைக் கூட்டுறவு சங்கங்கள், மத்திய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கப்படக் கூடிய உபரித் தொகையை கணக்கில் கொண்டு அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும். உபரி தொகை இல்லாமல் உள்ள சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடு வதற்கு ஏதுவாக 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

மேலும் பணியாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று முதல் முறையாக குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்து போனஸ் சட்டத்தின் கீழ் வராத சங்கங்களாக இருப்பினும் நிகர இலாபம் ஈட்டும் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர இலாபம் ஈட்டாத தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்கள் இருப்பின் அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.3000/ம், தொடக்க சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.2,400/ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்கவும் ஆணை யிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள தலைமை கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் 43,683 பணியாளர்களுக்கு ரூ.44 கோடியே 42 இலட்சம் மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படவுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மிகவும் ஊக்கத்துடன் பணியாற்றுவதுடன் எதிர்வரும் விழாக் காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும்.

இவ்வாறு கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

### குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

# புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, அக்.23

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 23.10.2024 அன்று காலை 08.00 மணி முதல் 24.10.2024 அன்று மாலை 4.00 மணி வரை (32 மணி நேரம்) மண்டலம் 4, 5, 6, 8, மற்றும் 9-க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் - 4 - தண்டையார்பேட்டை.

மண்டலம் - 5 - புரசைவாக்கம் (பகுதி), பெரியமேடு, சௌகார்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிபேட்டை.

மண்டலம் - 6 - ஓட்டேரி, அயனாவரம் , பெரம்பூர், செம்பியம்.

மண்டலம் - 8 - புரசைவாக்கம் (பகுதி), கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ்.

மண்டலம் - 9 - திருவல்லிக்கேணி.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி பூத் கமிட்டி அமைத்தல் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் கலந்தாலோசனைக் கூட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் தலைமையில் 22.10.24 அன்று நடைபெற்றது. இதில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், மலர்விழி கண்ணன், மதுராந்தகம் தொகுதி மேற்பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் மாவட்ட அமைப்பாளர் தொழிலாளர் அணி மற்றும் நகரச் செயலாளர் கு.குமார் ஒன்றிய செயலாளர்கள் கே.கண்ணன், ஜி.தம்பு, பொன்.சிவகுமார், பி.எச்.சத்தியசாய், பேரூராட்சி செயலாளர்கள் வி.டி.ஆர்.வி. எழிலரசன், ஆ.சுந்தரமூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.உசேன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை, அடையாரிலுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர்கள் கல்லூரியில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துறை அமைச்சராக பதவியேற்று முதன் முறையாக ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது பயிற்சியாளர்கள் மற்றும் போட்டித் தேர்வு எதிர் நோக்கவிருக்கும் மாணவர்கள் இடையே அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து விரைந்து அனைத்து கோரிக்கைகளும் தீர்க்கப்படுவதாக உறுதியளித்தார். தொடர்ந்து கட்டிடங்கள் கட்டட வளாகங்கள், சமையல் கூடங்கள், உணவுகளின் தரம் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு அவற்றை மேலும் மேம்படுத்த அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தினார். (அ) மற்றும் (ஆ) பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி மையம், அகில இந்திய குடிமைப்பணி தேர்வு மையம் ஆகிய இடங்களை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் போது கூடுதல் தலைமைச் செயலாளர், பயிற்சித்துறை தலைவர் விக்ரம் கபூர், கூடுதல் பயிற்சித்துறை தலைவர், வீரப்பன், உட்பட அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்தோனேசியாவின் பாத்தாம் தீவில் இந்தோனேசியா தி.மு.க. அயலக அணி சார்ப்பில் விழா ஏற்பாடு செய்யப்பட்டது . வி.பி.திராவிடமணி இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்த நிகழ்வில் கலைஞர் ஆர்மியின் ஒருங்கிணப்பாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்க் கேள்வி செந்தில் வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கலைஞரின் சாதனைத் திட்டங்களையும், திராவிட மாடல் அரசின் தேவையையும் எடுத்துரைத்தார். முன்னதாக மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது, நிகழ்வில் சிங்கப்பூரை சேர்ந்த செந்தில்குமார், சந்திரசேகரன், செல்வராஜ், ஆறுமுகம் மற்றும் இந்தோனேசியாவில் வாழும் சிவா, நாகராஜன், பாலா, பாலமுருகன், கலையரசன், ஜெகதீஸ், முத்துச்செல்வம், மற்றும் பல கழக உடன்பிறப்புகள் கலந்துக்கொண்டனர்.